சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:128/2017

2023ம் ஆண்டு ஜுன் திங்கள் 05ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் நாராயணன் (DW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

05.06.2023

நான் தற்போது ஆவியூரில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் பஞ்சவர்ணமும் அவரது சகோதரியான லட்சுமியும் அவர்களுடைய சகோதரர்கள் மீது தாக்கல் செய்துள்ள வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. உயில் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க கோரப்பட்டுள்ளது. பெரியகருப்பன் அவருடைய மகன்களான 2முதல் 4பிரதிவாதிகளான ராஜேந்திரன் சுப்பிரமணியன் ஆகியோர் பெயரில் எழுதி வைக்கப்பட்ட உயில் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ,.1 ஆவணம் நான் சொல்லும் உயில் தான். அதில் உள்ள முதலாவது சாட்சியாக நான் கையெழுத்து போட்டுள்ளேன். 2வது சாட்சியாக பெரியகருப்பனின் சம்மந்தகாரான சண்முகவேல் கையெழுத்து செய்துள்ளார். உயிலுக்கு விவரம் சொன்னது யார் என்றால் ராமசாமி, பெரியகருப்பனிடம்

சொன்னார். உயிலில் என்ன என்ன சொத்துக்கள் சேர்க்க வேண்டும் என்ன எழுதவேண்டும் என்பதை பெரியகருப்பன் ராமசாமியிடம் சொன்னார். பெரியகருப்பன் உயிலுக்கான விவரங்களை ராமசாமியிடம் சொன்ன பிறகு ராமசாமி பி.வா.சா.ஆ1 தட்டச்சு செய்து வந்தார். தட்டச்சு செய்து வந்த பிறகு பெரியகருப்பன்  உயிலை படித்து பார்த்து அதில் கையெழுத்து செய்தார். பெரியகருப்பன் உயிலில் கையெழுத்து போட்டதை நானும் மற்றொரு சாட்சியான சண்முகவேலும் பார்த்தோம். சண்முகவேலும் நானும் சாட்சி கையெழுத்து போட்டதை பெரியகருப்பன் பார்த்தார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.